# இஸ்திக்ஹாரா செய்வதற்கான துஆ

ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத் தூதர் ﷺ அவர்கள் எங்களுடைய அனைத்துச் செயல்களைச் செய்யும் போதும் இஸ்திக்ஹாரா செய்துகொள்ளுமாறு எங்களுக்கு அவர்கள் திருக் ஃகுர்ஆனின் ஒரு அத்தியாயத்தை எவ்வாறு கற்பிப்பார்களோ அவ்வாறே முறையாகக் கற்றுத்தருவார்கள். அவர்கள் ﷺ கூறுவார்கள், நீங்கள் ஒரு முக்கியமான வேலையைச் செய்ய நினைத்தால் இரண்டு ரகஅத்துக்கள் நஃபிலான நிய்யத்துடன் தொழுதுகொள்ளுங்கள், தொழுது முடித்து விட்டபின் கீழ்க்காணும் துஆவை கேளுங்கள்:

أَللّٰهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ، وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ، وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ، أَللّٰهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ عَاجِلَ أَمْرِي وَآجِلِهِ، فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي ، ثُمَّ بَارِكْ لِي فِيهِ، وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ شَر لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ عَاجِلَ أَمْرِي وَآجِلِهِ، فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ، وَاقْدُرْ لِي الخَيْرَ حَيْثُ كَانَ، ثُمَّ أَرْضِنِي

*பொருள்: அல்லாஹ்வே, நான் உன்னுடைய பரிபூரண அறிவின் பொருட்டாக நன்மையை நாடுகிறேன் மற்றும் உன்னுடைய பேராற்றலின் பொருட்டாக எனக்கு ஆற்றலையும் உன்னுடைய மகத்தானஅருட்கொடையினையும் வேண்டுகிறேன். ஏனெனில், நீ மட்டுமே ஆற்றல் மிக்கவன், என்னிடம் எவ்வித ஆற்றலுமில்லை, நீ அனைத்தையும் அறிந்தவன், நான் எதையும் அறியமாட்டேன், நீ மறைவானவற்றையெல்லாம் அறிந்தோனாக இருக்கின்றாய். அல்லாஹ்வே, என்னுடைய இந்தச் செயல் எனக்கு என்னுடைய மார்க்கத்தின் அடிப்படையிலும் வாழ்வாதாரம் மற்றும் என்னுடைய இறுதி முடிவு நன்மையானதாக அமைவதிலும் அல்லது எனக்கு தற்போதுள்ள தேவை அல்லது பிற்காலத்திற்காகவும் சிறந்ததாக இருக்கும் என்று நீ அறிந்திருக்கின்றாய் என்றால் அதனை எனக்காக விதித்துவிடு மற்றும் அதனை எனக்காக எளிதாக்கித் தருவாயாக, அதன்பின் அதனை எனக்கு நற்பாக்கியமாக ஆக்கிவைப்பாயாக. அல்லாஹ்வே, என்னுடைய இந்தச் செயல் எனக்கு என்னுடைய மார்க்கத்தின் அடிப்படையிலும் வாழ்வாதாரம் மற்றும் என்னுடைய முடிவு நன்மையானதாக அமைவதிலும் அல்லது எனக்கு*

www.uzairfalahi.com

*தற்போதுள்ள தேவை அல்லது பிற்காலத்திற்காகவும் தீங்கானதாக இருக்கும் என்று நீ அறிந்திருந்கின்றாய் என்றால் அதனை என்னை விட்டு அப்புறப்படுத்துவாயாக மேலும், என்னை அதிலிருந்து திருப்பிவிடுவாயாக, மற்றும் எதில் எனக்கு நன்மை இருக்கின்றதோ அதனை எனக்கு விதித்தருள்வாயாக அதன்பின் அதனையே ஏற்றுக்கொள்ளவும் செய்வாயாக.* (புக்ஹாரி).

* * *

www.uzairfalahi.com